# மோசே

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின்
மேற்கோள்கள்

(படங்களுடன்)

# டாக்டர் மோசே



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி,** ஜுலை 19, 1954, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

35. இப்பொழுது, இந்தக் கூட்டங்களும் ஜனங்கள் கூடிவருவதும், அதற்காகத்தான்; அது விசுவாசத்தை ஊக்குவித்து (தூண்டுவதற்கும்), விசுவாசத்தை உயர்ந்த



நிலைக்குக் கொண்டுவரவும் தான். நம்மால் சுகமளிக்க முடியாது. நிச்சயமாக முடியாது. ஆனால் அதைச் செய்வதில் ஒரு பாகத்தை உடையவர்களாயிருக்கிறோம். அது

சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதாக இருக்கிறது; அதைச் செய்வதற்கான ஒரு பாகம் அதுதான். வேறொரு பாகம் என்னவென்றால், அந்நிய பாஷைகளில் பேசுவதாக இருக்கிறது. அது வெளிப்பாட்டின் மூலமாக இருக்குமானால், அது பாகத்திலுள்ள ஒன்று தான். ஒரு-ஒரு தீர்க்கதரிசின வரம், அது அதில் வேறொரு பாகமாக இருக்கிறது. அதன்பிறகு அடையாளங்களும் அற்புதங்களும் இருக்கின்றன, எல்லாமே வரங்களாகவும், எல்லாமே சபையை ஊக்குவிக்கும்படியாகவும், சபையை ஒன்றாக வைத்துக்கொள்ளவும் சபையில் இருக்கின்றன. இயேசு மறுபடியுமாக மகிமையில் திரும்பி வருவது மட்டுமாக, இயேசுவுடைய ஜீவனின் ஒவ்வொரு விசேஷ குணத்திற்காகவும் (attribute) இருக்கின்றன. ஆமென்.

இப்பொழுது, உங்கள் சத்துரு பிசாசாக இருக்கிறான். தேவன் ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு வழியிலும், ஜனங்களை சுகமடைந்தவர்களாக வைக்கும்படி எப்போதுமே

முயற்சித்து வந்திருக்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?

தேவன் சுகமளித்தலுக்கான ஒரு அருளப்பட்ட வழி இல்லாமல் அவர் ஒருபோதும் எந்த நேரத்திலுமே ஜனங்களை



விட்டுவிடவேயில்லை. அவர் எப்போது அதைச் செய்தார் என்பதை, நீங்கள் வேதவாக்கியங்களில் மேற்கோள் காட்டலாம்.

ஜனங்கள் எவ்வளவு மறந்து போயிருந்தாலும், ஜனங்கள் எவ்வளவு வெகு தூரமாக அகன்று போயிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, தேவன் சுகமளித்தலுக்கான ஒரு

அருளப்பட்ட வழியை உடையவராகவே இருந்தார்.

அவர் எப்போதுமே அதைக் கொண்டிருந்தார். அதை விசுவாசித்த யாரோ ஒருவரை கூடவே அவர் கொண்டிருக்கத்தான் செய்தார்.

நீண்ட காலத்திற்கு முன்பு, ஆரம்ப காலங்களைப் பாருங்கள், அவர் ஒரு அருளப்பட்ட வழியை உடையவராகவே இருந்தார். அப்போது அவர் ஒரு வெண்கல சர்ப்பத்தைக் கொண்டிருந்தார்;



அதுவே, சரிநேராக திரும்பி, எகிப்து தேசத்தை விட்டு வெளியே வந்து கொண்டிருந்த, இஸ்ரவேல் புத்திரர்களுக்கு தேவனால் அருளப்பட்ட வழியாக இருந்தது. அவர்கள் அணிவகுத்து வரத் தொடங்கின போதே, அங்கே வியாதி இருக்கும் என்பதை அறிந்திருந்தார், எனவே அவர் அப்படியே ஒரு - சொன்னார், நல்லது - அவர் ஒரு வழியை அருளினார்.

36. நான் இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பு, இங்கு ஏதோவொரு இடத்தில், மோசே ஒரு மருத்துவராயிருந்தான் என்றும், அவன் வைத்தியனாகிய மோசேயாக இருந்தான் என்றும் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தேன். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா, இல்லையா என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவன் ஒரு வைத்தியனாக (doctor) இருந்தான். "எகிப்தியரின் சகல ஞானத்திலும் அவன்



கற்பிக்கப்பட்டிருந்தான்" என்று வேதாகமம் கூறுகிறது. அது சரிதானா? இந்நிலையில் அவர்களோ மருத்துவர்களை குறித்து தற்பெருமையாக வீம்புபேச்சுபேசிக் கொண்டிருந்தார்கள். ஓ, என்னே, எனவே, மருத்துவராகிய மோசே...

இங்கே சிகாகோவில் ஏராளமான மருத்துவ விஞ்ஞானம் இருப்பதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன், மோசே எவ்வாறு 20 இலட்சம் ஜனங்களை நாற்பது



வருடங்களாக ஆரோக்கியமானவர்களாகவும், வலிமை வாய்ந்தவர்களாகவும் பாதுகாப்பாக வைத்திருந்தான் என்பதை அறிய விரும்புகிறேன், அவர்கள் அந்த வனாந்தரத்தை விட்டு வெளியே அணிவகுத்து வந்த போது, அவர்கள் மத்தியில் பலவீனமான ஒருவரும் இல்லாதிருந்தார்கள். அது அற்புதமாக இல்லையா?

அவனிடம் இருந்த அந்த நோய்தீர்க்கும் மருந்துகளில் சிலதை நான் கொண்டிருக்க விரும்பியிருப்பேன், நீங்களும் விரும்பியிருக்க மாட்டீர்களா?

அவன் அங்கே பின்னால் கட்டி–புண் முதலியவற்றிற்கு மெல்லிய துணியின் மேல் வைத்துக்கட்டும் எத்தனை அத்தி பதவாடை பற்றுகளையும் மற்றும் காரியங்களையும் உபயோகித்தானோ என்று வியப்படைகிறேன்? அவன் ... பின்னால் எத்தனை பச்சிலைகளையும் மற்றும் பென்சிலின் தடுப்பூசிகளையும் கொண்டிருந்தான் (பாருங்கள்?)



மருத்துவராகிய மோசே, அவன் எகிப்தை விட்டு வெளியே கொண்டு வந்த 20 இலட்சம் ஜனங்களைக் கொண்டிருந்தான், கிட்டத்தட்ட அவ்வளவு எண்ணிக்கையில் இருந்த

அவர்களை எகிப்தை விட்டு வெளியே கொண்டு வந்து, அவர்களை பாலஸ்தீனத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே, ஒரு இரவில் எத்தனை குழந்தைகள் பிறந்திருப்பார்கள்? டாக்டர் மோசே போய்ப்பார்க்க வேண்டியிருந்தது. எவ்வளவு ஜனங்களுக்கு வயிற்று வலி இருந்திருக்கும், அவர்கள் நாள் முழுவதும் பாதை நெடுகிலும் தங்களால் கண்டுபிடிக்க முடிந்ததை தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்? ஒவ்வொரு இரவிலும் மருத்துவத்திற்காக எத்தனை பேர் மருத்துவர் மோசேயை அழைத்திருப்பார்கள்? நீங்கள் எப்பொழுதாவது அதைக் குறித்து சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? எவ்வளவு ஜனங்கள் அந்தப் பாறைகளின் மேலும் மற்றும் காரியங்களின் மேலும் விழுந்து, தங்கள் கால்களில் சிராய்ப்புகள் ஏற்பட்டிருக்கும், மேலும் ஒருக்கால், ஒவ்வொரு நாளும் காலையோ அல்லது ஏதோவொன்றையோ, அல்லது அதைப்போன்ற வேறு (எதையோ) உடைத்திருப்பார்கள்? அவர்கள் முறுமுறுத்துக் கொண்டும், பின்வாங்கிக்கொண்டும், மற்ற

எல்லாமாகவும் இருந்த காரணத்தினால், அவர்கள் தொல்லையில் சிக்கிக் கொண்டார்கள். மேலும் மருத்துவர் மோசே...

37. அவனுடைய மருந்துப் பெட்டியை நோக்கி, அவனிடம் என்னவெல்லாம் இருந்தன என்று பார்க்க நீங்கள் விரும்பியிருக்க மாட்டீர்களா? வேதாகமம் அதைக் கொடுக்கிறது. மோசே தன்னோடு வைத்திருந்த ஒவ்வொரு துணுக்கு மருந்தையும் வேதாகமம் கொடுக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?



உங்களுக்கு அது தெரியுமா? சற்றுநேரத்தில், நான் அதை உங்களுக்குக் காண்பிப்பேன்.

இப்பொழுது, இதோ அவனுடைய மருந்து பெட்டியில் பார்வையிட்டு, இப்பொழுது மோசேயிடம் என்னவிருந்தது என்பதைக் காணப் போகிறோம். யாத்திராகமம், சரி. நாம் பார்ப்போம், இதோ அது இருக்கிறது. இது திறந்திருக்கிறது. “உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே.” அவனிடம் இருந்த ஒவ்வொரு மருந்துச்சீட்டும் அதுதான். எனவே ஒரு குழந்தை பிறக்கப் போகிறது, தாய் தொல்லையில் இருக்கிறாள் என்று யாராவது கூறும்போது, “உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே.” ஏதோவொன்று சம்பவித்து ஒரு மனிதன் அவர்களிடம் இருந்து, அவனுடைய கண்களில் ஒன்று வெளியே தள்ளிவிட்டிருந்தால், “உன்னைச் சுகப்படுத்துகிற, உன் தேவனாகிய கர்த்தர் நானே.” ஒரு மனிதன் விழுந்து, தன்னுடைய காலை உடைத்துக்கொண்ட போதும், “உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய

கர்த்தர் நானே." பிள்ளைகளில் ஒன்றுக்கு மார்சளிக் காய்ச்சல் (pneumonia) இருந்திருந்தாலும், "உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே."

"டாக்டர் மோசே அவர்களே, இன்றிரவு அந்தப் பட்டியலில் நீர் என்ன வைத்திருக்கிறீர்? இன்றிரவு வழியில் என்ன இருக்கிறது? இன்றிரவு சலுகை உரிமைச் சீட்டில் (charter) என்ன இருக்கிறது? எங்களிடம் இங்கே வியாதிப்பட்ட குழந்தை இருக்கிறது."

மோசேயோ, "உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே" என்று சொன்னான்.



"டாக்டர் மோசே அவர்களே, உமக்கு நன்றி, நாங்கள் போய் அதை பயன்படுத்திக்கொள்கிறோம். கர்த்தாவே, இந்தக் குழந்தையைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நீர் என்று நீர் சொல்லியிருக்கிறீரே, கர்த்தாவே. ஆமென். நாங்கள் உம்மை விசுவாசிக்கிறோம், கர்த்தாவே." அடுத்த நாள் காலையில், குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும். அது போதுமானதாக இருந்தது. "உன்னைச் சுகப்படுத்துகிற கர்த்தர் நானே." மோசேயிடம் இருந்த ஒரே மருந்துக் குறிப்பு (prescription) அதுதான், 20 இலட்சம் ஜனங்கள் அந்த வனாந்தரத்தினூடாக நாற்பது வருடங்களாக கொண்டு வரப்பட்டும், அவர்களோடு அந்த வனாந்தரத்தை விட்டு வெளியே வந்தவர்களில், பலவீனமாகவோ, முடமாகவோ, அல்லது குருடாகவோ இருந்த ஒருவரும் அங்கே இல்லாதிருந்தார்கள். அல்லேலூயா.

மன்னித்துக்கொள்ளுங்கள், அது-அது திடீரென்று செயல்படுவதை நிறுத்த வேண்டியிருந்தது. அது ஏறக்குறைய அரை மணிநேரமாக அங்கே கட்டுப்படுத்திவைக்கப்பட்டிருந்தது. சரி.

38.



"உன்னைச் சுகமாக்குகிற கர்த்தர் நானே." அவர்களுக்குத் தெரிந்த ஒரே மருந்துக் குறிப்பு (prescription) அதுதான். அது மிக நன்றாக வேலை செய்தது. நாற்பது வருடங்களாக இருபது இலட்சம் ஜனங்களை சுகமாக

வைக்கும் ஒரு மருத்துவரை இன்று எனக்குக் கொடுங்கள் பார்க்கலாம், அவன் நிச்சயமாகவே கொஞ்சம் தொழிலை கொண்டிருந்து, தனக்கு ஒரு நற்பெயரை ஏற்படுத்திக்கொள்வான்.

நல்லது, நான் உங்களுக்குக் கூறுகிறேன், மோசே உபயோகித்த அதே மருந்துக்குறிப்பு இன்று உலகத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் திறந்தேயிருக்கிறது. ஆமென். "விருப்பமுள்ளவன் வந்து, நீரூற் - தண்ணீரிலிருந்து, ஜீவத்தண்ணீரிலிருந்து இலவசமாய்ப் பருகக்கடவன். விருப்பமுள்ளவன் வரக்கடவன்." ஆமென்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

கிறிஸ்தவத்தைப் பாவனை செய்து கொள்ள முயற்சிக்கும், வெதுவெதுப்பான சபை அங்கத்தினர்களாகிய உங்களிடம் தான், இந்நாட்களில் ஒன்றில், நீங்கள் அந்தப் பரிசுத்த ஆவி கூட்டத்தைப் பின்பற்ற முயற்சிக்கப் போகிறீர்கள், அப்போது உங்களுடைய சக்கரங்கள் அதோ அங்கே வெளியே எங்கோவுள்ள சேற்றில் கழன்று போவதைக் காண்பீர்கள்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: இஸ்ரவேலும் சபையும், பாகம் 3

(ISRAEL AND THE CHURCH #3)

**வெள்ளிக்கிழமை மாலை, மார்ச் 27, 1953**

**பிரன்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா**

53-0327

135. அவர்கள் தங்கள் ஆயுதவர்க்கத்தையும், தங்களுடைய அரைக்கச்சைகளையும் கட்டிக்கொண்டு, தொடர்ந்து அணிவகுத்துச் சென்றார்கள் (marched out).

அவர்கள் நேராக சிவந்த சமுத்திரத்திற்கு வந்தார்கள்.

அவர்களைப் போக விடுவதில் பார்வோன் சந்தோஷமாயிருந்தான்.

அவர்கள் சிவந்த சமுத்திரத்தை அடைந்த போது, அங்கே அவனுடைய இராணுவம் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அதோ அவர்கள் சரியாக அங்கே பாளயமிறங்கியிருந்தார்கள், இந்தப் பக்கத்தில் மலைகளும் வனாந்தரங்களும் இருக்க, இந்தப் பக்கத்திலோ பார்வோனின் சேனை வந்து கொண்டிருந்தது, அவர்களுக்கு முன்னால் சிவந்த சமுத்திரம் இருந்தது.

ஆனால் தேவனுடைய பாதையானது சிவந்த சமுத்திரத்தினூடாக வழிநடத்தியிருந்தது. அவருடைய

பாதையானது வழிநடத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறியும் வரையில், அதைக் குறித்து அக்கறை கொள்வது எல்லாம் அவ்வளவு தான், அப்படியே தொடர்ந்து நடந்து கொண்டேயிருங்கள்.

அல்லேலூயா, “மோசே, அந்தக்கோலை எடுத்துக்கொண்டு, அந்தத் தண்ணீரை நோக்கி நடந்து செல்.” ஆமென்!

“கர்த்தாவே, என்ன நடந்து கொண்டிருக்கிறது?”

“அது உன்னுடைய வேலை அல்ல. அப்படியே தொடர்ந்து நடந்து கொண்டேயிரு!” ஆமென்.

136. டாம் மெரிடெத்தும், மற்றவர்களுமான தோழர்களே,

சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுங்கள். “என்ன சம்பவிக்கப் போகிறது?” அது உன்னுடைய வேலை அல்ல; அப்படியே தொடர்ந்து பிரசங்கம் பண்ணுங்கள்! தேவனுக்கு துதியைச் செலுத்துங்கள்.

137. இதோ அவர்கள் போகிறார்கள், அவர்கள் அங்கே இறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவன் அந்த அக்கினிஸ்தம்பத்தில் இருந்து, “அவர் கோப கண்களோடு அதனூடாக கீழே நோக்கிப் பார்த்தார் என்றும், அவர் அவ்வாறு பார்த்தபோது, சிவந்த சமுத்திரம் பயந்து, பின்னிட்டுத் போகத் துவங்கி, இஸ்ரவேலர்கள் வெட்டாந்தரையின் வழியாக கடந்து

சென்றார்கள்" என்று எழுத்தாளர்களில் ஒருவன் எழுதினான்.

அவர்களுடைய கால்களில் ஒருபோதும் சேறு படக்கூட இல்லை.

138. **நல்லது, இந்த மனிதர்களோா நெடுக வந்து, "அவர்களைப் போல நாமும் மனிதர்கள் தான், அவர்கள் தொழுது கொள்வதைப் போன்று, நாமும் தொழுது கொள்கிறோம், எனவே நாம் அதைச் செய்வோம்" என்று கூறிக் கொண்டனர்.**

**அவர்கள் அங்கே வெளியில் வந்த போது, அவர்களால்**

அதைச் செய்ய முடியாது என்பதைக் கண்டுகொண்டனர்.



139. சகோதரனே, இந்நாட்களில் ஒன்றில். வேறுபிரிக்கும் நேரம் வரும்போது, அதுதான் சம்பவிக்கப் போகிறது.

கிறிஸ்தவத்தைப் பாவனை செய்து கொள்ள முயற்சிக்கும்,

**வெதுவெதுப்பான சபை அங்கத்தினர்களாகிய உங்களிடம் தான், இந்நாட்களில் ஒன்றில், நீங்கள் அந்தப் பரிசுத்த ஆவி கூட்டத்தைப் பின்பற்ற முயற்சிக்கப் போகிறீர்கள், அப்போது உங்களுடைய சக்கரங்கள் அதோ அங்கே வெளியே எங்கோவுள்ள சேற்றில் கழன்று போவதைக் காண்பீர்கள். அது சரியே.**

கர்த்தரைச் சந்திக்க பத்து கன்னிகைகள் போனார்கள், அதில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களாகவும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்ளாகவும் இருந்தார்கள். **அவர்கள்**

தீவட்டிகளில் எண்ணையை வைத்திருந்து, அது பிரகாசமாக (எரிய, திரியை) கத்தரித்து விடுகிறார்கள், இந்நாட்களில் ஒன்றில், அவர்கள் மேலே (போகப்) போகிறார்கள். அப்போது அங்கே அழுகையும் புலம்பலும் பற்கடிப்பும் இருந்தது.

140. அந்த விருத்தசேதனமில்லாத எகிப்தியர்கள், அவர்களால் ஏன் அதைச் செய்ய முடியாதிருந்தது? அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்பட்டிருக்கவில்லை.

# அவர்கள் உடன்படிக்கையில் இல்லை.



அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்பட்ட விசுவாசிகளாக இருந்திருப்பார்களானால்,

**தேவன் இஸ்ரவேலர்களை அடையாளம் கண்டது போன்று அதேவிதமாக அவர்களையும் (எகிப்தியர்களையும்) அடையாளம் கண்டுகொண்டிருக்க வேண்டியிருந்திருக்கும்.**

மகிமை! ஓ, நான் சரியாக இப்பொழுதே என்னுடைய அளவை போன்று இருமடங்காக விரும்புகிறேன். நான் பக்திபரவசப்படுகிறேன். நான் உண்மையாகவே பக்திபரவசப்படுகிறேன்.

**கவனியுங்கள் அவர்கள் விருத்தசேதனம் அற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் மனிதர்களாக இருந்த போதிலும்,**

## அவர்கள் உடன்படிக்கையில் இல்லை.

அவர்கள் அருமையாகவும், சிறப்பாகவும் உடையுடுத்தியிருந்தார்கள். அவர்கள் அவ்வளவு நல்லவர்களாக ஜீவித்தார்கள். அவர்களுக்கு சிறந்த வீடுகள் இருந்தன. அவர்கள் உலகப்பிரகாரமாக சிந்திக்கிற சிறந்த வர்க்கமாயிருந்த ஜனங்களுக்குள் இருந்தனர்.

மற்றவர்களைப் போலவே அவர்களும் சபைக்குச் சென்றார்கள். அவர்கள் எல்லா நேரமும் பின்தொடர்ந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு தேவனைக் குறித்து எதுவும் தெரியாது என்று என்னிடம் சொல்ல வேண்டாம். யோசேப்பு

ஏற்கனவே அவர்களிடம் சொல்லியிருந்தான், அந்தச் செய்திகள் (news) நானூறு வருடங்களுக்கு முன்பே அங்கே பரவியிருந்தது. நிச்சயமாக, அவர்கள் அதை அறிந்திருந்தார்கள்.

**ஆனால் அவர்களோ, "மதவெறிப்பிடித்த கூட்டம், அவர்கள் செய்யக் கூடிய எதையும் நம்மாலும் செய்ய முடியும்" என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களோ தோல்வியடைந்தார்கள்.**

**தேவன் விருத்தசேனத்தை மாத்திரமே அடையாளம் கண்டுகொண்டார்.** அங்கே அவர்கள் போனார்கள்.

141. சிறு வயதான தாவீது நின்று கொண்டு, "ஜீவனுள்ள தேவனுடைய சேனைகள் இங்கே நின்று கொண்டு, அந்த விருத்தசேனம் இல்லாத பெலிஸ்தியர்கள் ஜீவனுள்ள தேவனுடைய சேனைக்கு சவால் விட அனுமதிக்கலாம் என்றா என்னிடம் சொல்ல வருகிறீர்கள். ஏதோவொன்றை என்மேல் வையுங்கள், நான் போகட்டும்" என்று கூறினதில் வியப்பொன்றுமில்லை. ஆம், ஐயா. இன்னும் அதிகமான தாவீதுகளை எங்களுக்குத் தாரும்.

142. அவர்கள் அந்த பிரவாகத்தைக் கடந்தபோது, அவர்கள் மறுகரையை அடைந்தார்கள். அப்போது தேவன் அதை மூடிப்போட்டார், அங்கே அந்த

ஆளோட்டிகள் இருந்தார்கள். அந்த யூதர்கள் எவ்வாறு உணர்ந்தார்கள் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அங்கே பின்னால் திரும்பிப் பார்த்த போது, அவர்கள் மேல் ஏற்படுத்தப்பட்டு, அவர்களை சவுக்கால் அடித்து, அவர்களுடைய முதுகை நீள்வரிகள் உண்டாக அடித்து தாக்கி, அவர்களை இந்தவிதமாக மூர்க்கத்தனமாக வேலை வாங்கிய (pulled over), அந்த அதே மனிதர்கள் செத்து, கடலில் மிதந்து கொண்டிருந்தார்கள்.

**(இந்தச் செய்தி சரிபார்ப்பில் உள்ளது)**

# தேவன் இன்றிரவும் ஒரு பரிகாரத்தை வைத்திருக்கிறார்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

166. அங்கே இஸ்ரவேலர்கள் அதனூடாகப் போகையில், என்னால் அவர்களைக் காண முடிகிறது. முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, அங்கே வெளியே அவர்களுக்கு எந்த பரிகாரமும் இல்லாதிருந்தது. வைத்தியனாகிய மோசேயினால் (Dr. Moses) சரியானவிதமாய் இருந்த ஒரு ஊனீரை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது, இந்நிலையில் அவர்கள் சில பாம்பு கடிகளை உடையவர்களாயிருந்தார்கள், எனவே தேவன் ஒரு வழியை அருளினார். அது சரிதானா? அவன் ஒரு சர்ப்பத்தை உண்டாக்கினான், அவன் அதை வெண்கலத்தினால் உண்டுபண்ணி, அதை ஒரு கம்பத்தின் மேல் வைத்தான். ஜனங்கள் செய்ய வேண்டியிருந்த ஒரே காரியம் என்னவென்றால், சென்று, அந்தக் கம்பத்தை, அந்தக் கம்பத்தின் மேலிருந்த அந்த சர்ப்பத்தைப் பார்த்து, தேவன் தான் அதை அங்கே மேலே வைத்தார் என்று விசுவாசிப்பது தான், அப்பொழுது அவர்கள் சுகமடைந்தார்கள்.

167. அவர்களில் சிலர், “நல்லது, என்னால் சில பாம்புகடி விஷத்திற்கு மருந்தாக உள்ள சில பச்சிலைகள் (snakeroot) எனக்குக் கிடைக்கக் கூடுமா என்று நான் பார்க்கும்படி இங்கே போகிறேன், என்னால் அதை வைக்க முடியுமா என்று பார்க்கப் போகிறேன் என்று கூறினார்கள்.

168. மற்றவன், “நல்லது, ஜான், நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டான்.

169. “பாம்புக்கடி விஷமருந்து பச்சிலைகள் (snakeroot) கொஞ்சம் எடுத்து, இங்கே அதை வைத்து, அது சுகமடையுமா என்று பார்க்கப் போகிறேன்” என்று கூறினான்.

170. (இவனோ), “நான் தேவனுடைய வழியை ஏற்றுக்கொண்டு, சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைக்கப் போகிறேன்” என்றான்.

171. இவன் பிழைத்துக்கொண்டான்; பாம்புக்கடி விஷமருந்து பச்சிலைகள் (snakeroot) தோல்வியடைந்து விட்டன. ஆமென்.

172. தேவன் இன்றிரவும் ஒரு பரிகாரத்தை வைத்திருக்கிறார். அல்லேலூயா! அது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாக

இருக்கிறது. நான் பைத்தியக்காரன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஒருக்கால் நான் இருக்கலாம். நான் அவ்வாறு இருந்தால், நான் சந்தோஷமாக இருக்கிறேன். எனவே நான் வேறுவிதமாக இருந்ததைக் காட்டிலும், இந்தவிதமாக இருப்பதிலேயே அதிக சந்தோஷமாயிருக்கிறேன், எனவே அப்படியே... நான் இவ்விதமாக இருப்பதையே அதிகம் விரும்புகிறேன். பாருங்கள்? எனவே நான்-நான் அப்படியே அற்புதமாக உணருகிறேன். சரி. ஆம், ஐயா. தேவன் ஒரு அருளப்பட்ட பாதையை உடையவராயிருந்தார்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*











# ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும் ஊழியக்காரன் செயல்பட முடியாது



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# லூக்கா 10:2

**அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.**

*செய்தி:* 61-1112 - **கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்** - Jeffersonville, Indiana, USA

73. அவர்கள் அனைவரும் அந்தப் பெண்ணத்தை உடைத்தெறிந்து விட்டு, "நாங்கள் கோட்பாடுகளையும், எங்கள் பிரமாணப் புத்தகத்தி லுள்ளவைகளையும் மறந்துவிட்டு, கர்த்தருடைய வார்த்தைக்கு திரும்புகிறோம்" என்று கூறுவார்

களானால், அப்பொழுது என்ன நடக்கிறதென்று பாருங்கள். தேவன் அவர்கள் மத்தியில் ஒரு தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவார். அவர் நிச்சயம் அப்படி செய்வார். **அவர்கள் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருந்தால், தீர்க்க தரிசியை தேவன் அவர்களிடம் அனுப்புவார். முதலாவதாக அவர்கள் ஜெபிக்க வேண்டும். தேவன் அதற்காக காத்திருக்கிறார். ஜனங்களுக்கு அதில் ஒரு பங்கு இருக்க வேண் டும் என்று தேவன் விரும்புவது விசித்திரமல்லவா? இயேசு அறுப் புக்கு ஆயத்தமாயிருந்த பயிர்களைக் கண்டபோது, "அறுப்புமிகுதி, வேலை யாட்களோ கொஞ்சம். நீங்கள் அறுப் புக்கு எஜமானை வேண்டிக் கொள்ளுங் கள் (அது அவர்), அறுப்புக்கு வேலை யாட்களை அனுப்பும்படி என்னிடம் வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார்.** (மத். 9:37-38). **நீங்கள் ஏற்க வேண்டிய ஒரு**

பாகமும் அதில் உண்டு. தேவன் தம்முடைய சபை அவரை நோக்கிக் கூப்பிடுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார். அவர் எக்காலத்தும் அவ்வாறே செய்து வந்திருக்கிறார். தமது ஊழியக்காரனை செயல்படுத்த, ஜனங்கள் தம்மை நோக்கிக் கூப்பிட வேண்டுமென்று தேவன் இன்று காத்துக் கொண்டிருக்கிறார். ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும் ஊழியக்காரன் செயல்பட முடியாது. இஸ்ரவேல் ஜனங்கள் முகங்குப்புற விழுந்து, தங்களை மீட்க ஒருவனை அனுப்ப வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணின வரைக்கும். அவர்களால் அற்புதங்களும், அடையாளங்களும் நடப்ப

**தைக் காண முடியவில்லை.** தேவன் அவர்களை மீட்பதற்கென ஒருவனை வைத்தி ருந்தார். **இஸ்ரவேல் ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும், தேவன் ஒரு தீர்க்கதரிசியை வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் வைத்திருந்து அதற்காக காத்திருந்தார். அவர்கள் ஜெபம் பண்ணத் தொடங்கின வுடனே, தேவன் மீட்பனை அனுப் பினார். இன்றைக்கும் ஜனங்கள் ஒன்றுகூடி ஜெபம் செய்வார்களா னால், தேவன் அதையே செய்வார்.** சரி! எலியா அந்த கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும், ஆகாபுக்கும். அவன் தேவனுடைய ஊழியக்காரன் என்னும் அடையாளமாயிருந்தான். அவன் தேவனுடைய தீர்க்கதரிசி. அவன் விருப்பப்படி அவனால் வானத்தை திறக்கவும், முடவும் முடியும் என்பதன் மூலம் அவன் இஸ்ரவேலுக்கு அடையாளமாயிருந்தான். அவன் நிச்சயம் அப்படி யிருந்தான். வானத்தை முடக்கூடிய ஒருவரை எனக்குக் காண்பியுங்கள் பார்க்கலாம். தேவனைத்

தவிர வானங்களைத் திறக்கக் கூடிய ஒருவரை எனக்குக் காண்பியுங்கள் பார்க்கலாம். தேவனுடைய வார்த்தை - தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிகளிடத்தில் உள்ளது.

# சபையைத் தாக்குகிற கடைசி வாதை



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தேவனால் அருளப்பட்ட பாதை,

டிசம்பர் 1, 1953

112. சரி. நீங்கள் இதைக் கவனிக்க விரும்புகிறேன். அதன்பிறகு அவன், "நீங்கள் இந்த ஆட்டுக்குட்டியை எடுத்து, சாயங்கால நேரத்தில் அதைக் கொல்ல விரும்புகிறேன்" என்றான், கிறிஸ்துவுக்கு பரிபூரண முன்னடையாளம், அவர் சாயங்காலத்தில் கொல்லப்பட்டார். அப்போது இஸ்ரவேலின் முழு சபையாரும் மரணத்திற்கு சாட்சிகளாக இருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவில் செய்தார்கள். இரத்தமானது கதவின்

மேல் பூசப்பட வேண்டியிருந்தது, அந்த இரவில், மரண தூதன் தேசத்தில் சவாரி செய்து வந்து, இரத்தம் இல்லாத எல்லாவிடங்களிலும் மரணம் இருக்கப் போவதாக இருந்தது.

113. சகோதரனே, நான் இதை உங்களுக்குச் சொல்லுகிறேன், தேசத்தில் மரண தூதன் எப்பொழுதாவது சவாரி செய்து கொண்டிருக்கிற ஒரு நேரம் இருந்திருக்குமென்றால், அது இன்றிரவு தான். ஆசாரியன் நின்று கொண்டிருக்கிற சபை வாசலுக்கு அவன் வருகிறான். இரத்தத்தையும் இயேசுவின் வல்லமையையும் மறுதலித்துக் கொண்டும், தொடர்ந்து போய்க் கொண்டிருக்கும் ஒரு சபை, “தேவனுடைய மகிமை விலகிப்

போய்விட்டது," மரண தூதன் உள்ளே செல்கிறான், அதோடு அது முடிந்து விடுகிறது. அப்பொழுது அவர்கள் சடங்காசாரமாகவும் (formal), மரித்தவர்களாகவும், தேவனுடைய வல்லமையை மறுதலிக்கிறவர்களாகவும் ஆகி விடுகிறார்கள். முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, அந்த முழு கூட்டத்தினர் மேலும் மரணம் மூடிக்கொள்கிறது. நீங்கள் ஒருபோதும் அவர்களை விசுவாசிக்கும்படி செய்யவே மாட்டீர்கள். அவர்களால் அதை விசுவாசிக்க முடியாது.

114. இப்பொழுது, இந்த மரண தூதனைக் கவனியுங்கள். என்னால் அந்த தகப்பனைக் காண முடிகிறது. இப்பொழுது, இப்பொழுது, அவர்கள்

திடமாக விசுவாசித்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள், சூரியன் அஸ்தமித்து, இருள் வரத் தொடங்கின போது, அவர் ஒருமுறை அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழாக வந்து, அணிவகுத்துச் செல்வதற்கான உத்தரவு கொடுக்கப்படுவது வரையில், அவர்கள் அங்கே கீழேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. சகோதரனே, இப்பொழுது, நசரீன்களாகிய உங்களுக்கு இது நன்மையானதாக இருக்கும்.

115. கவனியுங்கள், இரத்தத்தின் கீழாக வருதல்... ஒருமுறை இரத்தத்தின் கீழாக வந்து, அதை கதவின் மேற்சட்டத்திலும், நிலைக்காலின் மேலும் தெளித்தல். ஆனால் ஒரு மனிதன் அந்த வாசல் வழியாக இந்த

வீட்டிற்குள் வரும் ஒவ்வொரு தடவையும், எகிப்தை விட்டு வெளியே அணிவகுத்துப் போகும்படியான உத்தரவுகள் வரும் வரை, அவன் அங்கேயே தங்கியிருந்தான். எனக்கு அது பிடிக்கும். அங்கே தங்கியிருத்தல்.

116. அந்த இரவில் விருந்து கொண்டாட்டங்களுக்குப் (parties) போய்க் கொண்டிருந்த அந்த வாலிப பெண்கள் இஸ்ரவேலின் சிறு வாலிப பெண்களிடம், "ரெபேக்காளே, வேகமாக வா" என்றும், மற்றும் அதைப்போன்ற காரியங்களையும் கூறிக் கொண்டிருப்பதை என்னால் காண முடிகிறது, "ரெபேக்காளே, வேகமாக வெளியே வா, நாங்கள் ... போய்க் கொண்டிருக்கிறோம்."

117. "என்னால் வர முடியாது."

118. "ஏன்?"

119. "நல்லது, நாங்கள் இரத்தத்தின் கீழிருக்கிறோம்." ஓ, என்னே. "நாங்கள் இரத்தத்தின் கீழே இருக்கிறோம்."

120. "ஓ, விரைவாக வா, நாம் போவோம். முட்டாள்தனம், அங்கிருக்கும் உன் அப்பாவிடம் உள்ள அந்தப் பழங்கால பைத்தியக்கார மார்க்கம்."

121. "ஆனால் கவனி, நான் கட்டாயம் அந்த இரத்தத்திற்கு அப்பால் போகக் கூடாது என்று என் இருதயத்திலுள்ள ஏதோவொன்று என்னிடம் கூறுகிறது."

122. அவர்கள் தொடர்ந்து தங்கள் பெரிய விருந்து கொண்டாட்டங்களுக்கும் (parties) மற்றவைகளுக்கும் போய்விட்டார்கள். அதன்பிறகு அங்கே அதனூடாக, ஏறக்குறைய நள்ளிரவில், ஒரு வினோதமான உணர்ச்சி வரத் தொடங்கியது, அது இப்பொழுது மறுபடியுமாக உலகத்தின் மேல் வந்து கொண்டிருப்பது போன்று இருந்தது, நாம் அதைக் குறித்து சற்று முன்பு பேசினோம். ஏதோ தவறாக உள்ளது: மகா துயரார்ந்த மந்தமான இருள் பூமியின்மேல் வந்திறங்கியது; காற்று வீசத் தொடங்கினது. நாம் போகப்போகிற இடமாகிய இங்கேயிருக்கும் இந்த வீட்டிற்குள் இருக்கிற இந்தச் சிறு பையனை

என்னால் காண முடிகிறது. அவனைப் பாருங்கள், அவன், "அது என்னவென்று சொல்லுங்கள்? நான்-நான்-நான் ஒருவிதத்தில் வினோதமாக உணருகிறேனே. நடனம் ஆடிக் கொண்டிருந்த வாலிப பெண்கள் எல்லாம், வீட்டிற்கு வேகமாக போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்" என்று கூறுகிறான்.

123. ஓ, என்னே. அப்போது ஜெபம் பண்ண மிகவும் கால தாமதம் ஆகிவிட்டது. இப்பொழுது, முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, அவன்-அவன் சுற்றும் முற்றும் பார்க்கத் தொடங்கினான் - தொடங்குகிறான். அந்தச் சிறு பையன், "அப்பா, வீட்டிலுள்ள மூத்த மகன்

கொல்லப்படப் போகிறான் என்று வார்த்தை சொல்லுகிறது?" என்று கேட்பதை என்னால் கேட்க முடிகிறது.

124. "ஆமாம்."

125. "நல்லது, அப்பா, நம்முடைய வீட்டைக் குறித்து என்ன?"

126. "மகனே, நாம் எவ்வளவு பாதுகாப்பாக இருக்க முடியுமோ அவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறோம்."

127. "நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

128. "நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம்.

நாம் பெற்றிருக்கிறோம்... நாம் இரத்தத்தின் கீழே இருக்கிறோம்."

129. அவன் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது, சற்று கழிந்து... கொஞ்சம் கழித்து, நான் ஜன்னலுக்கு வெளியே பார்க்கிறேன், அந்தச் சிறு பையன் ஜன்னலுக்கு வெளியே பார்க்கிறான், அவன் கவனித்தபோது, அதோ இரண்டு பெரிய கறுத்த செட்டைகள் ஆகாயத்தினூடாக வந்து கொண்டிருக்கிறது. அதுதான் மரணம். அங்கே எந்த நேரத்திலாவது கறுத்த செட்டைகள் தேசத்தைத் தாக்குவது உண்டானால், அது இன்றுதான்: நாம் பூமி அதிர்ச்சிகளை உடையவர்களாயிருக்கிறோம்; நாம் சாவைக் கொண்டுவருகிற கொள்ளைநோய்களைக்

கொண்டிருக்கிறோம்; இந்த தேசத்தில் வரக்கூடிய எல்லாவிதமான காரியங்களையும் நாம் கொண்டிருக்கிறோம்; அவர்கள் எகிப்தில் செய்தது போன்றே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அழிவுக்கு முன்பாக எகிப்தைத் தாக்கிய கடைசி வாதை மரணமாக இருந்தது. சபையைத் தாக்குகிற கடைசி வாதை ஆவிக்குரிய மரணமாக இருக்கிறது. அதுதான் கடைசி காரியமாக இருக்கிறது.

130. அவர்கள் மரித்துக்கொண்டிருக்கிறார்கள், சபைகள் முற்றிலுமாக மரித்துக்கொண்டிருக்கின்றன. ஆகிக்கொண்டிருக்கிறோம், நாம், ஓ, நாம் நீடித்தக் கூட்டங்களை

கொண்டிருக்கத்தான் செய்கிறோம், ஆனால் எந்த எழுப்புதலும், எழுப்புதல் இல்லை.

131. அவர்கள், "அமெரிக்காவில் பெரிய எழுப்புதல்..." என்று கூறுகிறார்கள்.

132. அது எங்கேயிருக்கிறது என்று எனக்குச் சொல்லுங்கள் பார்க்கலாம். எழுப்புதல் எங்கே? அமெரிக்காவில் ஒரு எழுப்புதலின் முதலாவது கட்டம் கூட தாக்கவில்லை. அதற்கு காரணம் என்னவென்றால், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக அவர்களைத் திரும்ப தேவனால் அருளப்பட்ட பாதைக்குக் கொண்டு வந்து, கல்வாரி பாதையின் மூலமாக அவர்களைத் திரும்பவும் தேவனிடத்திற்கு அனுப்புவதற்குப்

பதிலாக, நாம் மனிதனுடைய வேதசாஸ்திரத்தையும் மற்றும் காரியங்களையும் போதிக்க முயற்சிக்கிறோம். நாம் அவர்களை சபைக்குள் கொண்டுவந்து, அவர்களைச் சபைக்குள் சேர்த்து, அவர்களை சபைக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணி, சபைக்குள்ளே அவர்களுடைய கரங்களைக் குலுக்கி, சபைக்குள்ளே அவர்களுடைய கடிதங்களைக் கட்ட முயற்சிக்கிறோம்; ஆனால் அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய சபையில் பிறந்தாக வெண்டும். அந்த காரணத்தினால் தான் நமக்கு எந்த எழுப்புதலும் இல்லாதிருக்கிறது.

133. நமக்கு என்ன அவசியமாயிருக்கிறது என்றால்,

மறுபடியும் பழைமை நாகரீகமான கலக்குதல் தான், அங்கே, பழங்கால ஜான் வெஸ்லி எழுப்புதல், அங்கே அவர்கள் நின்றுகொண்டு, இரவு முழுவதும் பிரசங்கம் பண்ணினார்கள், அப்போது பரிசுத்த ஆவியின் வல்லமை கேட்டுக்கொண்டிருந்த கூட்டத்தினரின் மேல் விழுந்து கொண்டிருந்தது. அதுதான் நமக்கு மீண்டும் அவசியமாயிருக்கிறது. ஆமென். நான் ஒருவிதத்தில் இப்பொழுது பக்திபரவசப்படுகிறேன். எனவே கவனியுங்கள், நண்பனே, நான் உங்களிடம் ஒரு காரியத்தைக் கூறட்டும். இந்த தேசத்திற்கு பெரிய தேவையாக இருப்பதைக் குறித்து நான் எண்ணிப்பார்க்கும் போது, நமக்கு இன்னும கூடுதலாக வேதாகமக்

கல்லூரிகள் அவசியமில்லை. நமக்கு இன்னும் அதிகமான பிரசங்கிமார்கள் தேவையில்லை. நமக்கு என்ன தேவையாயிருக்கிறது என்றால், நமக்கிருக்கிற பிரங்கிமார்கள் பரிசுத்த ஆவியால் நிறையப்படுவது தான். அதுதான் நமக்கு அவசியமாயிருக்கிறது. உண்மை, நான் இங்கே நின்று கொண்டிருக்கையில், அதுவே சத்தியமாக இருக்கிறது.

134. இப்பொழுது, நீங்கள் வேறு ஒரு காரியத்தைக் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பிறகு, அந்தச் சிறு பையன், இந்தச் செட்டைகள் கீழே இறங்கி வருவதை கவனிக்கிறான், அது ஒரு வீட்டுக்குப் போன போது, அலறல் கூக்குரல் சத்தம் எழும்புவதைக் கேட்கிறான். ஆனால்

அந்தச் சிறு பையன், "அப்பா, அந்த இரத்தம் அங்கேயிருக்கிறது என்பதில் உமக்கு நிச்சயம் உள்ளதா?" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறதா?

135. அவன் வெளியே நடந்துவந்து, வாசல் மேல் நோக்கிப் பார்த்து, "ஆம், ஐயா, மகனே, அவள் மூடப்பட்டிருக்கிறாள்" என்று கூறுவதை என்னால் காண முடிகிறது.

★★★★★

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)**











# சிவந்த சமுத்திரத்தில் இஸ்ரவேலர்களைத் துரத்தின எகிப்தியர்களை சுமந்து சென்ற குதிரைகளுக்கு இருந்த அறிவு



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **தீர்மானத்தின் வல்லமை,** *அக்டோபர் 7, 1955*

*35. கவனியுங்கள். வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள். இதோ அவர்களுக்குப் பின்னால் போலியாக நடித்து பாசாங்கு செய்பவர்கள் வந்து கொண்டிருந்தார்கள், இந்த எகிப்திய மனிதர்கள் முழுவதும் ஏறி நிரம்பி, பின்னால் கூடவே வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுடைய சக்கரங்கள் உடைந்து போய், மூழ்கி, அமிழ்ந்து மாண்டு போனார்கள் என்பதை நாம் கண்டுகொள்கிறோம். தேவன் என்ன செய்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் அந்தக் குதிரைகளை பயமுறுத்தினார். அவர்கள் தவறானதைச் செய்து கொண்டிருந்தார்கள் என்பதை அந்தக்*

குதிரைகள் அறிந்திருந்தன; அவைகள் ஒரு கூட்டம் பாவிகளை அந்தப் பாதையின் குறுக்கே சுமந்து வந்து கொண்டிருந்தன. குதிரைக்கு இருக்கும் அறிவு (உணர்வு) கூட ஏன் நமக்கு இல்லாமல் போனது? அவர்கள் தவறாக இருந்தார்கள் என்பதை அவைகள் அறிந்திருந்தன.

ஒருசமயம் பின்வாங்கிப்போன ஒரு தீர்க்கதரிசியை சுமந்து வந்து கொண்டிருந்த ஒரு வயதான கோவேறு கழுதை அங்கேயிருந்தது. அது அந்தத் தூதனானவரைப் பார்த்து பயந்து போயிருந்தது. அது அந்த தூதனானவரை - பிலேயாமைக் காண முடிந்தது (எண்ணாகமம் 22:23,25,27). மேலும் இந்தக் குதிரைகளும், அவர்கள் தவறானதைச் செய்து கொண்டிருந்தார்கள் என்பதை

அறிந்திருந்தன, வேதாகமம் கூறுகிறது... வேதாகமம் அதைக் கூறுகிறது என்றால், அது அதைச் சரியாக ஆக்குகிறது. அவர் பார்வோனுடைய குதிரைகளை பயமுறுத்தினார் என்று வேதாகமம் கூறுகிறது. அவர்கள் அதை அறிந்து கொள்ளாமலே மிக அதிக தூரமாகப் போய்க் கொண்டேயிருந்தார்கள், ஆனால் அவர்கள் அறிந்திருப்பதைக் காட்டிலும் அந்தக் குதிரைகளுக்கு இன்னும் அதிகம் தெரிந்திருந்தது. இஸ்ரவேலர்கள் அந்த ஒளியையும் தேவனையும் பின்தொடர்ந்து போனதின் மூலமாக, அவர்களைக் கொண்டு சென்ற அதே பாதை, அவர்களை பரிபூரண வெற்றியை நோக்கி எடுத்துச் சென்ற அதே பாதை தான், திடீர் தாக்குதல் தொடுப்பவர்களாகிய அந்த

*எகிப்தியர்களைக் கொன்று, அவர்களை மூழ்கடித்துப் போட்டது (யாத். 14:21-28).*

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**எல்லாமும் தாறுமாறாகிக் கொண்டு போகிறது, நாம் ஜெபத்தை நிறுத்த வேண்டும் என்பதற்கு எந்த அடையாளமும் இல்லை. எப்படியும் நாம் ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.**

மோசேயை குறித்த போதனை, 56-0513, பத்தி எண் 84



**இயேசுவை உங்கள் வீட்டை விட்டு புறம்பாக்குவீர்கள் என்றால், குடும்ப ஜெபத்தை நிறுத்துவீர்களானால், வேதாகமம் வாசிப்பதை நிறுத்துவீர்களானால், உங்கள் வீடுகளில் இன்னும் இதுபோன்ற காரியங்களைச் செய்வீர்கள் என்றால், உங்கள் வீடுகளில் பிரச்சனைகள் வருவதைப் பார்க்கலாம்.**

நீ இதை விசுவாசிக்கிறாயா?, 53-0906, பத்தி எண் E-72

Only believe,
Only believe
All things are possible,
Only believe.


சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in